முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 04 திகதி முதல்

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 11 திகதி வரை

(20.11.2022 ஞாயிறு முதல் 27.11.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞான குருவாய் வந்தருளி
   ஞானிகள் நாமபூசை நடத்தி
   தானதருமம் தழைக்கச் செய்து
   தரணி காக்கும் தவராஜனே
2. அரசனே அரங்கனே உமைவாழ்த்தி
   அகத்திய மகரிஷி யானுமே
   தரங்கையில் இந்தியா தமிழகத்தின்
   தக்க வருங்கால பலன் குறித்து
3. குறித்துமே சுபகிருது தேள்திங்களில்
   குறைவிலா சதுர்திகதி மேல் லாபதிகதி வரை
   தெரிவிப்பேன் நடக்கும் நிகழ்வாக ஆசி
   தேசிகனும் கேட்க அருளுவேன்
4. அருளவே அழிவான மக்களின்
   அவலமான குணக்கேடுகளால்
   அருளவரும் இயற்கை தானும்
   ஆற்றல்கூடி சினமாகி ஆபத்தை
5. ஆபத்தை இயற்கை சீற்றமாக்கி
   அழிவை இந்தியா தமிழகத்தில்
   ஆபத்தாக தந்திட நேருமப்பா
   ஆளுமைகள் வந்த நோக்கம் மறந்து
6. மறந்து படைத்த இறைவன்மேல்
   மனதடக்கம் அச்சம் கொள்ளா
   திறந்துவிட்ட ஊழல் செயல்களால்
   தேவைக்கு மேலான பதுக்கல் சுருட்டலால்
7. சுருட்டலால் இந்தியா தமிழகம்
   சுயநலவாதிகளால் பின்னடைவு
   இருட்டெடன பொருளாதார வகை
   இழிநிலை காணக் கூடும்
8. கூடாத பற்றாக்குறை எனும்
   கொடுமை சகலத்துறைகளிலும்
   ஈடேறி தருமநிலை மாறியே
   எங்கும் எதிலும் களவுநிலையாகி

9. ஆகியே மக்களை வதைக்கின்ற
அதீத வரிக்கொடுமை அனைத்திலும்
அகிலமே அஞ்சும்படி வரநேரும்
ஆளுமைகள் இனியும் காலம் கடத்தா
10. காலம் கடத்தா மக்கள் சேவையில்
கருணை கூட்டி சகலத்துறையிலும்
ஊழல்பற்றா செயலை மாற்றியே
உண்மை ஞான தருமவழி வந்தால்தான்
11. வந்தால்தான் இந்தியா தமிழகம்
வளர்ச்சித் தேசமாக மாறி
எந்தவித அழிவுமின்றி பாதுகாப்பை
ஈடில்லா இறைஅருளாகப் பெறும்
அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 4ம் நாள் 20.11.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் கார்த்திகை மாதம் 11ம் நாள் 27.11.2022 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

இவ்வுலக மக்களின் அறியாமையை போக்கி அவர்களுக்கு ஞானமளித்து வழி நடத்திடவே முருகப்பெருமானின் அம்சமாக ஞான குருவாக அவதரித்து உலக மக்களுக்கு கடைத்தேறிட ஞானிகளை வணங்கும் ஞானபூசைகளை நடத்தி மக்களை ஞானிகள் நாமஜெபங்களை செய்திடச் செய்வதுடன் கர்மவினை போக்கும் விதமாக தானதருமங்களை தாராளமாய் அளவிலாது செய்து உலகினில் தானதருமத்தை தழைக்கச் செய்து இவ்வுலகையே தவத்தால், தானத்தால், புண்ணிய பலத்தால் காக்கின்ற தவராசனே ஆறுமுக அரங்க மகா தேசிகனே உம்மை வாழ்த்தி சித்தர்கோன் அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 4ம் நாள் 20.11.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் கார்த்திகை மாதம் 11ம் நாள் 27.11.2022 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

அழிவுகளை உண்டாக்கும் விதமாக தர்மத்திற்கு புறம்பாக நடக்கின்ற சில மக்களின் செயல்பாடுகளினாலே மக்களைக் காக்கின்ற இயற்கைகூட சினம் கொண்டு தனது ஆற்றலை அதிகமாக்கி பெருமழையாக சீற்றமாகி இந்தியா தமிழகத்திலே ஆபத்தை உண்டாக்கும் சூழ்நிலை உள்ளதப்பா.

அதுமட்டுமல்லாமல் மக்களுக்கு சேவை செய்வேன் என்று கூறி ஆட்சி பொறுப்பிற்கு வந்தபின் தாம் வந்த நோக்கம் மறந்தும் தம்மை படைத்திட்ட இறைவன் மேலும் அச்சம் கொள்ளாமல் கடவுள் நம்பிக்கை இல்லாமல் தர்மத்திற்கு பயப்படாமல் அவர்களில் சிலர் செய்திட்ட பெரும் ஊழல் செயல்களால் தேவைக்கு மேலாக அதிக அளவிலே பதுக்கலும் பொதுமக்கள் பணத்தை சுருட்டியும் வைத்த அந்த சுயநலவாதிகளால் இந்தியா தமிழகம் பின்னடைவை சந்திக்கின்றதும் பொருளாதாரத்தில் இழிநிலையும் காணக்கூடும்.

அதுமட்டுமல்லாமல் இந்திய தேசத்திலே பலவகையாலும் பலதுறைகளிலும் பற்றாக்குறை உண்டாகி தருமம் குறைந்து எங்கும் எதிலும் களவு செய்வதும் அதிகமாகும். அதை சமாளிக்க

அரசும் மக்கள் மீது அதிக வரிகளை விதிக்க மக்கள் வரிக்கொடுமை தாளாமல் அச்சமுறுவர். உலகமே வரிக்கொடுமையால் அச்சமடையும்.

ஆதலினாலே இனியும் ஆட்சி புரிவோர் காலம் கடத்தாமல் மக்களுக்கு செய்கின்ற சேவையிலே கருணையுடன் நடந்து எல்லா துறைகளிலும் மலிந்து காணப்படும் ஊழலை கட்டுப்படுத்தி உண்மை ஞான தரும வழியில் நடந்தால்தான் இந்தியா தமிழகம் வளர்ச்சியுடைய நாடாக மாறி எந்தவிதமான இழிவுகளையும் சந்திக்காமல் அழிவிலிருந்து மீண்டு பாதுகாப்பை பெறும் ஈடில்லா கடவுளின் அருளையும் பெற்று கடைத்தேறிடும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–